ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

01.10.2026

1. ஞானத்தலைவா போற்றி போற்றி
ஞானிகளை படைக்கும் கந்தா போற்றி
தான தருமத்தின் வடிவேலே போற்றி
தவசியே தலைவனே முருகனே போற்றி

2. போற்றியே ஆறுமுக அரங்கன் யான்
புகலுவேன் பராபவ தரிவை திங்கள்
உற்றதொரு ஈராம் குருவார அருளாசி
உரைப்பேன் உலகோர் தரும வழிக்குவர

3. வருகவே ஆறுமுகன் வழி நடத்தும்
வல்லமைமிக்க பிரணவக் குடிலை
முருகா அரங்கா என வணங்கி
முழு சரணாகதி கொண்டு வர

4. வருகவே எங்களின் அருள்பலம்
வழிகாட்டுதலாக அமைந்துமே
தருமகுணம் தயவான மனிதர்களாக
தரணியோர் மாறி மாற்றம் காணும்

5. காணவே ஞானிகள் பூசை வழி
கலந்து நாமசெபம் போற்ற
தானாக அவரவர் வாழ்விலும்
தனித்துவம் வந்தடைய நேரும்

6. நேருமையான மக்களாக யாவரும்
நீதி காக்கும் வண்ணம் நடைமுறை
நெறிமுறை ஒழுக்கம் தேறியே
ஞானிகளே தேடி அருளும் பாக்கியம்

7. பாக்கியம் பெற்று சிறப்பர்
பாருலகில் குடிலின் தருமத்தை
ஆக்கமுடன் ஆதரித்து உதவி
அளவிலாப் பொருளுதவி செய்து வர

8. வருபவர்கள் வாழ்வில் ஏற்றம்
வசதி வளமாக மாறியே

தருமத்தை காக்கும் சக்தியாகி
தரணியில் சிறந்து நிற்பர்

9. நிற்கவே நிலவுலகம் எங்கிலும்
நிரம்பிட இந்த தரும பலம்
அற்புதம் நடக்கும் மாற்றமாக
ஆறுமுகனே இறங்கி அருள் செய்ய

10. அருள் செய்ய நல்ல தலைமை
அருள் செய்ய நல்ல ஆளுமை
வரம் தரும் இயற்கை வளமுடன்
வாழ்வாதாரம் கெடா உலக மக்கட்கு

11. மக்கட்கு சர்வ பாதுகாப்பாய்
மண்ணுலகம் மாற்றம் காணும்
தேக்கமின்றி ஞான ஆட்சி காலமாகும்
தேசிகன் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி